DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 190 | 2019 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW1 | ராசப்பன் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | நாச்சிமுத்து | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 28/10/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் மேட்டுப்பட்டியில் வசித்து வருகிறேன்.நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 5.7.2019 ம் தேதி அன்று மதியம் 12.00 மணிக்கு மேட்டுப்பட்டியில் உள்ள எனது தோட்டத்தில் உள்ள பனைமரத்தை ஜே.சி.பி. மூலம் எனது ஊரைச் சேர்ந்த கருப்புச்சாமி புடுங்கினார். நான் பனைமரத்தை புடுங்க கொடுக்கக்கூடாது என்று சொன்ன போது கருப்பசாமி என்னை போடா, வாடா, கோத்தா, உம்மா என்று அசிங்கமாக திட்டினார். பின்பு தென்னை மட்டையால் என்னை தொடையில் அடித்து கீழே தள்ளிவிட்டார். எனக்கு தொடையில் வீக்கமானது. நான் அம்பிளிக்கை காவல்நிலையத்தில் கருப்புச்சாமி, அவருடைய ஈஸ்வரி மீது புகார் கொடுத்துவிட்டு சிகிச்சைக்காக ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தேன். போலீசார் என்னைவிசாரணை செய்தார். என்னை காவல்நிலையத்திலும் மருத்துவமனையிலும் எனது தோட்டத்திலும் வைத்து விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது அந்த புகார்மனுவை நான் தான் எழுதினேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

என்னிடம் காட்டப்படும் புகார்மனுவை நான் தான் என் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். அந்த புகார்மனுவில் இடைச்சேர்க்கை சில வார்த்தைகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடைச்சேர்க்கையின் அருகில் நான் சுருக்கொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் நான் மருத்துவமனையில்சேர்ந்த மாலையில் என்னை விசாரணை செய்தார்கள். என்னை போலீசார் எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்று எனக்கு ஞாபகம்

இல்லை என்றால் சரிதான். மதியம் 1.00 மணியிலிருந்து 1.30 மணிக்கு காவல்நிலையத்தில் புகார்மனுவை கொடுத்தேன். அம்பிளிக்கை காவல்நிலையததில் இருந்து ஒட்டன்ச்ததிரம் அரசு மருததுவமனைக்க அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அன்றைய தினம் மதியம் 2.00 மணியளவில் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து இருக்க வாய்புள்ளதுஎன்றால் சரிதான். நான் புகார்மனுவிலும் போலீசார் விசாரணையிலும் கருப்புச்சாமி என்னை தென்னை மட்டையால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் பனைமரத்தை புடுங்கிய ஜே.,சி.பி. வாகனத்தின் பதிவெண்ணை போலீசார்விசாரணையிலும் புகார்மனுவிலும் சொல்லியுள்ளீர்களா என்றால் அதுபற்றி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. போலீசார் விசாரணையில் நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும இடமானது தனிநபருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் மருத்துவரிடம் என்னை குச்சியால் தாக்கினார்கள் என எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் பாதை பிரச்சனை சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதனால் எனக்கும் எதிரிக்கும் விரோதம் ஏற்பட்டு பேச்சுவார்த்தையில்லாமல் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரி ஜே.சி.பி. வாகனத்தை வைத்து மரங்களை பிடுங்க வில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிரியால் எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நானும், எனது மனைவியும் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது தவறி கீழேவிழுந்ததில் ஏற்படுத்திய காயத்தை எதிரிகள் ஏற்படுத்தியதாக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார்மனுவிலும் முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால்சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) Rasappan
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(sd) C.P.Mullaivanan
Judicial Magistrate
Oddanchatram.
Date : 28/10/2021

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 190 | 2019 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW2 | செல்லாத்தாள் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | ராசப்பன் | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 28/10/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் நல்லூர்பட்டியில் வசித்து வருகிறேன்.நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 5.7.2019ம் தேதி அன்று மதியம் 12.00மணிக்கு கருப்புச்சாமி மற்றும் அவரதுமனைவி ஈஸ்வரி ஆகிய இருவரும் ஜே.சி.பி.யை வைத்து எங்களது தோட்டத்தில் இருந்த பனைமரத்தை புடுங்கினார்கள். நான் பனைமரத்தை ஏன் புடுங்கினங்க என கேட்டேன். இடத்தை அளந்து கொண்டு செய்து கொள்ளலாம் என்று சொன்னேன். நாங்கள் அவ்வாறுதான் செய்வோம் நீங்கள் உங்களால் முடிந்ததை செய்துகொள்ளுங்கள் என்று சொன்னார்கள். எனது கணவர் அ.சா.1 அவரது செல்போனில் பனைமரத்தை புடுங்குவதை வீடியோ எடுத்தார் அதை ஏன் எடுக்கிறிங்க என இரண்டு பேரும் சேர்ந்து என்னையும் எனது கணவர் அ.சா.1யையும் தென்னமட்டையால் அடித்தார்கள். எனது முகத்தில் ரத்தம் வந்தது எனது கணவரும் ரத்தம் வந்தது எனது கணவரை தொடையில் அடித்துவிட்டார்கள் அவர்கீழேவிழுந்துவிட்டார். அப்போது எனது கணவரின் உறவினர் மயிலாத்தாள் வந்து கத்தினார். கருப்புச்சாமியும் ஈஸ்வரியும் எங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். அதன்பிறகு அம்பிளிக்கை காவல்நிலையம் சென்றோம். அங்கு சென்று புகார் செய்தோம். அதன்பிறகு ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நானும் அ.சா.1ம் சேர்ந்தோம். அங்கு மூன்று நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். அங்கு போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள். நாங்கள் நடந்த விவரத்தை சொன்னோம்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து சம்பவம் நடைபெற்ற தினம் அன்று மதியம் 1.00மணியிலிருந்து 1.15 மணி வரைவிசாரணை செய்தார்கள். போலீசார்

விசாரணையில் இடத்தை அளந்து பார்த்து செய்து கொள்ளலாம் என்ற விவரத்தை சொல்லியுள்ளீர்களா என்றால் இரண்டு வருடமாவதால் தற்போது அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் விசாரணையில் அ.சா.1 படம் எடுத்த விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார்விசாரணையிலும் எதிரிகள் இருவரையும் என்னையும் அ.சா.1 யும்தென்னமட்டையால் தாக்கினார்கள் என்ற விவர்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பனைமரத்தை புடுங்கிய ஜே.சி.பி. வாகனத்தின் எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த ஜே.சி.பி. வாகனம் யாருக்கு சொந்தமானது என்பதும் குறித்தும் தெரியாது என்றால்சரிதான். நான் மருத்துவமனையில் சுயநினைவுடன் தான் சிகிச்சைக்கு சேர்ந்தேன். ஆனால் சற்று மயக்கமாக இருந்தது. மருத்துவமனையில் மருத்துவரிடம் என்னை குச்சியால் தாக்கினார்கள் என எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனைக்கு 2.00 மணியிலிருந்து 2.30 மணிக்குள் வந்து சேர்ந்துவிட்டோம். நான் சொல்வதுபோல் எதிரிகள் யாரும் என்னையும்அ.சா.1 யும் தென்னைமட்டையால் தாக்க வில்லை என்றால்சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் யாரும் என்னையும் எனது கணவரையும் கொல்லாமல்விடமாட்டோம் என மிரட்டவில்லை என்றால்சரியல்ல. எங்களுக்கும் எதிரிகள் தரப்பிற்கும் உரிமையியல் வழக்கு நிலுவையில்இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கினால்எதிரிகள் தரப்பிற்கும் எங்களுக்கும் விரோதம் உள்ளது பேச்சுவார்த்தை எதுவும் கிடையாது என்றால் சரிதான். நானும் அ.சா.1 ம் இருசக்கரவாகனத்தில் செல்லுமபோது தவறி கீழேவிழுந்து ஏற்பட்ட காயத்தை எதிரிகள் ஏற்படுத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால்சரியல்ல. எனது கணவர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(sd) Chellathal

Signature of the witness

(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) C.P.Mullaivanan

Judicial Magistrate

Oddanchatram.

Date : 28/10/2021

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 190 | 2019 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW3 | மயிலாத்தாள் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | பழனிச்சாமி | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 28/10/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் நல்லூர்பட்டியில் வசித்து வருகிறேன். நான்விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எனது தம்பி அ.சா.1 ராசப்பனின் தோட்டத்திற்கு மதியம் 12.00 மணிக்கு மேல் சென்றேன். அப்போது அய்யயோ என சத்தம் கேட்டது. அ.சா.1 னின் மனைவி செல்லாத்தாளை ஈஸ்வரி தென்னைமட்டையால் அடித்தார். அ.சா.1 யை கருப்புச்சாமி தொடையில் அடித்துவிட்டார் நான் அங்கு சென்று சத்தம்போட்டேன். அப்போது கருப்புசாமியும், ஈஸ்வரியும் தேவிடியா முண்ட தெளவாரிமுண்ட என அசிங்கமாக திட்டினார்கள் என குழந்தையில்லாததால் அதை சொல்லி திட்டினார்கள். எனது இன்னொரு காலை ஒடித்துவிடுவதாகசொன்னார்கள்.அங்கிருநத பள்ளத்தில போட்டுவிடுவார்கள் என சொன்னார்கள். என்னைக்கு இருந்தாலும் உனது தம்பியின் சாவு என் கையில் என கருப்புச்சாமி மிரட்டினார். அதன்பிறகு எதிரிகள் கருப்புச்சாமியும், ஈஸ்வரியும் சென்றுவிட்டார்கள்.அ.சா.1 ம்,அ.சா.2 ம் அம்பிளிக்கை காவல்நிலையத்திற்காக சென்றார்கள். மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றார்கள். போலீசார் என்னைவிசாரைண செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

போலீசார் என்னை எனது தோட்டத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். என்னை மாலை 5.00 மணியளவில் விசாரணை செய்தார்கள். சம்பவம் நடைபெற்ற இடமான தனிப்பட்ட நபருக்கு சொந்தமானது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் தேவிடியா முண்ட தெளவாரிமுண்ட என என்னை திட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை எதிரிகள் எனது மற்றொரு காலை ஒடித்துவிடுவதாக சொல்லியுள்ள விவரத்தை போலுசார்விசாரணையல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார்விசாரணையி்லும் எதிரிகள் என்னை

பள்ளத்தில் போட்டுவிடுவார் என்ற விவரத்தையும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது உடன்பிறந்த சகோதாரர். அ.சா.1 தரப்பிற்கும் எதிரிகள் தரப்பிற்கும் உரிமையியல் வழக்கு இருந்துவருவதால் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். அதனால் நானும் எதிரிகள் தரப்பினருடன பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். நான் முதல்விசாரைணயில் சொல்லியுள்ளதுபோல் எந்தவொரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 தோட்டத்திற்குசெல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.1 னின் தோட்டத்திற்கு சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் என்னிடம் எனது தம்பியின் சாவு என்னைக்கு இருந்தாலும் என் கையில்தான் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல்விசரணையில் சொல்லியுள்ளது போல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 கொடுத்த புகாருக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் அ.சா.1 யும் அ.சா.2 யும் தாக்கவில்லை என்றாலும் நான்அதனை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(sd) Mayelathal
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) C.P.Mullaivanan
Judicial Magistrate
Oddanchatram.
Date : 28/10/2021

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 190 | 2019 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW4 | ஜெகன் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | செல்லமுத்து | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 28/10/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் நல்லூர்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தனியாக ஹோட்டல் வைத்துள்ளேன்.கடந்த 05.7.2019 ம் தேதி அன்று மாலை 5.00 மணிக்குஎனது பெரியப்பாஅ.சா.1 ராசப்பன் அவர்களை அடித்துவிட்டதாக கேள்விப்பட்டு அவரை பார்ப்பதற்காக அ.சா.1 னின் தோட்டத்திற்கு சென்றேன். அப்போது அம்பிளிக்கை காவல்துறையினர்அங்கு வந்து இருந்தனர்.வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம்கேட்டார்கள் நான் செய்துகொடுத்தேன். பார்வைமகஜரில்உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. பார்வைமகஜரில் நானும் ரெங்கசாமியும் கையொப்பம் செய்துகொடுததோம். பார்வைமகஜரில்உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.2. போலீசார் என்னைவிசாரைண செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

என்னை அ.சா.1 னின் தோட்டத்தில் மாலை 5.00 மணிக்கு போலீசார் விசாரணை செய்தார்கள். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாததால் எனக்கு ஞாபகமஇல்லை என சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. நான் எழுதாத வெள்ளைதாளில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துகொடுத்தேன் என்றால் சரியல்ல,அதனால் தான் அதில் என்னஎழுதப்பட்டுள்ளதுஎன்பது எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.1 னின் தோட்டத்திற்கு சென்றதாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால்சரியல்ல. அ.சா.1 நான் 5.00 மணிக்கு அவரது தோட்டத்திற்கு பார்க்க சென்றிருந்த சமயத்தில் அவர் மருத்துவமனையில் இருந்து இருப்பார்என்றாலும், நான் 5.00 மணிக்கு அ.சா.1 னின்தோட்டத்திற்கு செல்வதற்கு வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(sd) Jegan
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) C.P.Mullaivanan

Judicial Magistrate
Oddanchatram.
Date : 28/10/2021

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 190 | 2019 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW5 | ரெங்கசாமி | |
| க/பெ/தந்தையின் பெயர் | | முத்துச்சாமி | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 28/10/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஒட்டன்சத்திரம் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 2019ம் ஆண்டு எனது அண்ணன் அ.சா.1 ராசப்பனை பார்ப்பதற்காக மாலை 5.00மணிக்கு நல்லூர்பேட்டைக்கு சென்றிருந்தேன். அப்போது கருப்புச்சாமியும் அ.சா.1க்கும் சண்டை ஏற்பட்டது. எனது அக்கா மயிலாத்தாள் ராசப்பன் மருத்துமவனையில் இருப்பதாக சொன்னார். அம்பிளிக்கை காவல்துறையினர் அங்கு இருந்தார்கள். அப்போது வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் படித்து காண்பித்து கையொப்பம்கேட்டார்கள் கையொப்பம் செய்துகொடுத்தேன்.. பார்வைமகஜரில் உள்ள இரண்டவாது கையொப்பம் என்னுடையது. பார்வைமகஜரில் நானும் அ.சா.4 ஜெகனும் கையொப்பம் செய்துகொடுத்தோம். பார்வைமகஜரில்உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3. போலீசார் என்னைவிசாரைண செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன் எனக்கு எழுதபடிக்க தெரியும் என்றால் சரிதான். நான் எழுதாத வெள்ளை தாளில்அம்பிளிக்கை காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(sd) Rengasamy
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) C.P.Mullaivanan

Judicial Magistrate
Oddanchatram.
Date : 28/10/2021